**பண்டித ஜவஹர்லால் நேரு வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்,**

**காரைக்கால் & இந்திய வானிலைத்துறை**

**காரைக்கால் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**

**(09.05.2026 முதல் 13.05.2026 வரை)**

**தொ. எண் (அலுவலகம்): 04368 – 261182**

**E-mail: agronaas2012@gmail.comதொ. நகல் (அலுவலகம்): 04368-261260**

அறிக்கை எண்: 037 (05) PJN/GKMS/2026 தேதி:08.05.2026

**காரைக்கால் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**

| கடந்த வார வானிலை (03.05.2026 முதல் 07.05.2026 வரை) | | | | | வானிலை காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு 13.05.2026 – 8.30 மணி நேரம் வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **03/05** | **04/05** | **05/05** | **06/05** | **07/05** | | **நாள்-1 09/05** | **நாள்-2 10/05** | **நாள்-3 11/05** | **நாள்-4 12/05** | **நாள்-5 13/05** |
| 0 | 0 | 2.2 | 0 | 0 | மழை (மி.மீ) | 23 | 22 | 29 | 30 | 24 |
| 39 | 39 | 37 | 35 | 36 | அதிகபட்ச வெப்பநிலை (டி.செ) | 33 | 32 | 31 | 30 | 29 |
| 27 | 28 | 25 | 27 | 27 | குறைந்தபட்ச வெப்பநிலை (டி.செ) | 28 | 27 | 26 | 25 | 24 |
| 5 | 1 | 5 | 5 | 2 | மேக மூட்டம் | 8 | 8 | 8 | 8 | 8 |
| 55-86 | 53-89 | 71-92 | 80-91 | 55-89 | ஈரப்பதம் (%) | 80-90 | 80-90 | 80-90 | 70-80 | 70-80 |
| 6 | 4 | 7 | 4 | 4 | காற்றின் திசை | 12 | 10 | 14 | 12 | 10 |
| தெற்கு தென் மேற்கு | தெற்கு தென் மேற்கு | தென் மேற்கு | தெற்கு தென் மேற்கு | கிழக்கு தென் கிழக்கு | | கிழக்கு வட கிழக்கு | கிழக்கு வட கிழக்கு | கிழக்கு வட கிழக்கு | கிழக்கு வட கிழக்கு | கிழக்கு வட கிழக்கு |

**எதிர்பார்க்கப்படும் வானிலை (09.05.2026 முதல் 13.05.2026 வரை):**

மே 9 முதல் 13 வரை மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது.

அடுத்த ஐந்து நாட்களுக்கு வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். வெப்பநிலை 24-33 டி.செ, மாலை மற்றும் காலை நேர காற்றின் ஈரப்பதம் 70-90 சதவிகிதமாகவும், காற்றின் வேகம் 10-14 கி.மீ அளவுக்கு பதிவாக வாய்ப்புள்ளது. காற்றானது பெரும்பாலும் கிழக்கு வட கிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

மே 10 முதல் மே 16 வரை மழை (5.6 மிமீ) இயல்பை விட அதிகமாகவும் அதேசமயம், அதிகபட்ச வெப்பநிலை (33.8°C) இயல்பை விட குறைவாகவும் மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை (25.4°C) இயல்பாகவும் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## வேளாண் அறிவுரை

| **பயிர்கள் / கால் நடைகள்** | **பருவம்/ விவரங்கள்** | **வேளாண் ஆலோசனைகள்** |
|---|---|---|
| பொது ஆலோசனை | | எதிர்பார்க்கப்படும் மழையை பயன்படுத்தி, பயிரிடப்படாத நிலங்களில் கோடைக்கால உழவு செய்து மண்ணில் உள்ள பூச்சிகள், நோய்கள் மற்றும் களைகளை கட்டுப்படுத்தலாம்; மேலும், இது மண்ணில் காற்றோட்டத்தை அதிகரித்து, ஈரப்பதத்தை பாதுகாக்கவும், அடுத்த பயிருக்கு தேவையான ஊட்டச்சத்துக்கள் எளிதில் கிடைக்க உதவுகிறது. |
| பருத்தி | வளர்ச்சி பருவம் | பருத்தியில் களையைக் கட்டுப்படுத்த ஹெக்டருக்கு பயிரிதியோபக் சோடியம் (pyrithiobac sodium) 62.5 கிராம் a.i. + குயிசலோபாப் ஈதைல் (quizalofop ethyl) 50 கிராம் a.i களைக்கொல்லிகளை விதைத்த 20-25வது நாட்களில் பயன்படுத்தவும். |
| | சாறு உறிஞ்சும் பூச்சிகள் | பருத்தியில் சாறு உறிஞ்சும் பூச்சிகளை கட்டுப்படுத்த, அசாதிராக்டின் 0.03 (300 ppm) @ 2500–5000 மி.லி/ஹெக்டேர் அல்லது இமிடாக்லோப்ரிட் 17.8 SL @ 100–125 மில்லி/ஹெக்டேர் அல்லது தயாமீதாக்சாம் 25 WG @ 100 கிராம்/ஹெக்டேர் என்ற அளவில் தெளிக்கவும். |

| | | |
|---|---|---|
| உளுந்து | பூக்கும் தருணம் | சாம்பல் நோயைக் கட்டுப்படுத்த, வேப்பங்கொட்டை சாறு 5% (அ) வேப்ப எண்ணெய் 3% (அ) யூக்கலிப்டஸ் இலை கரைசலை நோயின் அறிகுறி தோன்றியவுடன் ஒரு முறையும், அதனைத் தொடர்ந்து 10 நாட்கள் இடைவெளியில் மீண்டும் ஒரு முறை தெளிக்கவும் (அ) கார்பென்டாசிம் 50 WP @ 500 கிராம்/ஹெக்டேர் (அ) கரையும் கந்தகத்தூள் 80 WP @ 1500 கிராம்/ஹெக்டேர் (அ) புரோபிகோணசோல் 25% EC @ 500 மி.லி/ஹெக்டேர் |
| | | இலை சுருள்வு நோயை கட்டுப்படுத்த நோயினால் தாக்கப்பட்ட செடிகளை 45 நாட்களுக்குள் களைந்தெடுத்தல். விதைத்த 30 நாட்களில் 10% நோச்சி இலை கரைசல் (அ) 3 % வெப்ப எண்ணெய் கரைசலை தெளிக்கவும். தேவையானால், அதனைத் தொடர்ந்து 15 நாட்கள் இடைவெளியில் மீண்டும் ஒரு முறை தெளிக்கவும். (அ) மீதைல் டெமட்டான் 25 EC @ 500 மில்லி/ஹெக்டேர் (அ) டைமேத்தோயேட் 30 EC @ 500 மி.லி/ஹெக்டேர் என்ற அளவில் தெளிக்கவும். |
| | | உளுந்து மற்றும் பச்சை பயிரில் ஏற்படும் மஞ்சள் தேமல் நோயை பரப்பும் வெள்ளை ஈ மற்றும் அஸ்வினியை கட்டுப்படுத்த மீதைல் டெமட்டான் 25% EC லிட்டருக்கு1 மி.லி. அல்லது டைமீதோயேட் லிட்டருக்கு 30% EC 1 மி.லி. என்ற அளவில் பயன்படுத்தலாம். |
| | | நெற் தரிசு உளுந்து மற்றும் பச்சை பயிருக்கு 2% DAP கரைசலை அதாவது ஏக்கருக்கு 4 1/2 கிலோ DAPயை 10 லிட்டர் தண்ணீரில் முதல் நாள் இரவு ஊறவைத்து பிறகு அடுத்த நாள் தெளிந்த நீரை 190 லிட்டர் தண்ணீருடன் கலந்து பூக்கும் தருணத்தில் ஒரு முறையும் 15 நாட்கள் கழித்து மறு முறையும் காலை அல்லது மாலை வேளையில் கைத்தெளிப்பான் கொண்டு இலைகள் நன்கு நனையும்படி தெளிக்கவும். |
| எள் | வளர்ச்சி பருவம் | எள் பயிரில் இலை தத்துப் பூச்சிகளை கட்டுப்படுத்த லிட்டருக்கு அசிடாமிபிரிடு 20 SP 0.3 கிராம் என்ற அளவில் தெளிக்கவும். |
| புடலை மற்றும் பாகல் | பூக்கும் பருவம் | புடலை மற்றும் பாகலில் பெண்பூக்களின் எண்ணிக்கைகளை அதிகரிக்க எத்ரல் கரைசலை 100 பிபிஎம் (ஒரு மில்லி 10 லிட்டர் தண்ணீரில்), விதைத்த 15 வது நாளிலிருந்து வாராந்திர இடைவெளியில் நான்கு முறை தெளிக்கவும். |
| பீர்க்கன் | பூக்கும் பருவம் | பீர்க்கனில் பெண்பூக்களின் எண்ணிக்கைகளை அதிகரிக்க எத்ரல் கரைசலை 250 பிபிஎம் (2.5 மில்லி 10 லிட்டர் தண்ணீரில்), விதைத்த 15 வது நாளிலிருந்து வாராந்திர இடைவெளியில் நான்கு முறை தெளிக்கவும். |
| கத்தரி | காய்க்கும் பருவம் | கத்தரியில் இலைப்புள்ளி மற்றும் பழம் அழுகல் நோயைக் கட்டுப்படுத்த சூடோமோனாஸ் ஃபுளோரசன்ஸ் (Pseudomonas fluorescens) அல்லது பேசில்லஸ் சப்டிலிஸ் (Bacillus Subtilis) ஒரு லிட்டர் நீரில் 5 கிராம் அல்லது 5 மி.லி கலந்த கரைசலை உடனடியாக தெளிக்க வேண்டும். |
| | | கத்தரி பயிரில் காய் பூச்சிகளை கட்டுப்படுத்த லிட்டருக்கு எமாமெக்டின் பென்சோயேட் 4% SG 0.4 கிராம் என்ற அளவில் தெளிக்கவும். |
| தென்னை | காய்க்கும் பருவம் | தென்னை மரத்தில் வேர் மூலம் தென்னை டானிக் (200 மில்லி/ மரத்திற்கு) 3 மாத இடைவெளியில் கொடுத்து குரும்பை உதிர்வதை தடுக்கலாம். |

**குறுஞ்செய்தி:** மே 9 முதல் 13 வரை மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது.

**முதல்வர்**